# ‘ஸ்மார்ட்’ கைக்கடிகாரத்தை அறிமுகம் செய்ய மெட்ரோ ரயில் நிறுவனம் திட்டம்

சென்னை, அக்.26: மெட்ரோ ரயில் பயணிகள் வசதிக்காக, புதிய ‘ஸ்மார்ட்’ கைக்கடிகாரத்தை அறிமுகம் செய்ய மெட்ரோ ரயில் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. அடுத்த 6 அல்லது 7 மாதத்தில் இந்த கைக்கடிகாரத்தை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளதாக மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரி தெரிவித்தார்.

சென்னை மாநகர போக்குவரத்து நெருக்கடியைக் குறைக்கும் வகையில்,மெட்ரோ ரயில் திட்டம் உருவாக்கப்பட்டது. முதல் கட்டமாக வண்ணாரப்பேட்டை - விமான நிலையம் வரை முதல் வழித்தடத்திலும், சென்ட்ரல்-பரங்கிமலை வரை இரண்டாவது வழித்தடத்திலும் மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

இந்த வழித்தடங்களில் தினசரி சராசரியாக 95 ஆயிரம் பயணிகள் பயணம் செய்து வருகின்றனர். பயணிகளின் வசதிக்காக பல்வேறு நடவடிக்கைகளை மெட்ரோ ரயில் நிர்வாகம் எடுத்து வருகிறது.

இந்நிலையில் பயணிகள் வசதிக்காக புதிய ‘ஸ்மார்ட்’ கைக்கடிகாரத்தை அறிமுகப்படுத்த மெட்ரோ ரயில் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. ‘டைட்டன்’ வாட்ச் நிறுவனம் புதிய ‘சிப்’ பொருத்திய கைக்கடிகாரத்தை தயாரிக்கிறது.

இந்த கைக்கடிகாரம் மூலம் பயணிகள் மெட்ரோ ரயில் நிலையத்துக்குள் எளிதில் செல்ல முடியும். நுழைவுப் பாதையில் உள்ள இயந்திரத்தில் கைக்கடிகாரத்தை காண்பித்தால் தானாக கதவு திறக்கும். கவுன்டரில் டிக்கெட் எடுக்க காத்திருக்கத் தேவையில்லை. டைட்டன் ஷோரூமில் இந்த கைக்கடிகாரத்தை ரூ. 1,000 செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

இது குறித்து மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரி ஒருவர் கூறியது: சென்னை மெட்ரோ ரயில் பயணிகள் வசதிக்காக விரைவில் ‘ஸ்மார்ட் வாட்ச்’ அறிமுகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

‘டைட்டன்’ நிறுவனம் நவீன ‘சிப்’ பொருத்திய இந்த கைக்கடிகாரத்தை தயாரித்து வழங்க உள்ளது. டைட்டன் நிறுவனத்தில் ரூ. 1,000 செலுத்தி பயணிகள் இந்த கைக்கடிகாரத்தை பெற்றுக் கொள்ளலாம்.

பின்னர் ஒவ்வொரு மாதமும் மெட்ரோ ரயில் பயணத்துக்கு பணத்தை ரீசார்ஜ் செய்வது அல்லது பணத்தை கட்டி புதுப்பித்தல் செய்ய வேண்டும்.

ஸ்மார்ட் கைக்கடிகாரத்தை வாங்கிப் பயன்படுத்தும்போது, பணத்தை செலுத்துவது எப்படி என்பது தொடர்பாக ஆலோசனை தற்போது நடைபெறுகிறது. இந்த நவீன கைக்கடிகாரம் திட்டத்தை அறிமுகப்படுத்த 6 மாதம் முதல் 7 மாதங்கள் ஆகும். தகவல்தொழில்நுட்பவளர்ச்சிக்கு ஏற்ப இந்த புதிய திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இந்த

கடிகாரத்தை மெட்ரோ பயணிகள் கையில் அணிந்து கொண்டு மெட்ரோ நுழைவுப் பாதையில் சென்றால் கதவு தானாகத் திறக்கும். பயணிகள் விரைவாக நிலையத்துக்குள் செல்ல முடியும். ரூ.1,000 முதல் ரூ.1,500 வரை பல்வேறு மாடல்களில் இந்த கடிகாரங்கள் கிடைக்கும் என்றார் அவர்.